بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**FRIDAY SERMON/வெள்ளிக் கிழமை குத்து.ஃ.பா**

**(08 September 2017/ 16 Dhul Hijjah 1438 Hijira)**

# *SURA AL-MA'UN (Chapter 107)*

## *சூரத்துல் மாஊன் - (அத்தியாயம் - 107)*



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஸஹ்ஹுதும் தஅவ்வுதும் அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

1. *அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருபெயரால்*
2. *நியாயத்தீர்ப்பைப் பொய்ப்பிக்கின்றானே அவனை நீர் பார்த்தீரா?*
3. *பின்னர் அவன் அநாதைகளை விரட்டுகின்றான்.*
4. *மேலும், ஏழைக்கு உணவளிப்பதன் பெயரிலும் அவன் தூண்டுவதில்லை.*
5. *இன்னும் தொழுகையாளிகளுக்குக் கேடுதான்.*
6. *அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாகவும் இருப்போர்.*
7. *அவர்கள் பிறருக்கு காண்பிக்கவே தான் தொழுகின்றார்கள்.*
8. *மேலும், அர்ப்பமான பொருள்களைக் கொடுப்பதை விட்டும் தடுக்கின்றனர். (அத்தியாயம் 107)*

இந்த அத்தியாயம், அல்லாஹ்விடமான பிரார்தனையின் சரியான வழியையும் அர்த்தத்தையும் எடுத்துரைக்கின்றது. நாம் பிரார்த்தனை செய்யும் போது ஒரு உறைத்த மன நிலையும், கவனவும் அதில் நமக்கு இருக்க வேண்டும். பிறருக்கு உதவி புரியும் காரியத்தில் நடைமுறைக்குரிய சிந்தனையும் நேர்மையான மனவும் நமக்கு இருக்க வேண்டும். இவ்விஷயத்தில் நேர்மை முழுமையாகயிருக்க வேண்டும். அது, திமிர் பிடித்த மனதுடனல்ல. தாம் செய்யும் நற்செயல்களை குறித்து பிறர் பேசிக்கொள்வதற்கும் பாராட்டிக் கொள்வதற்குமாக செய்ய கூடாது. சுருக்கமாக, தொண்டாற்றுதல் என்பது ஒரு நிகழ்சி நிரலாக மாறிடக் கூடாது. எல்லாவிதமான பக்தி செயல்களும் ஆராதனை செயல்களும் நாம் நேர்மையுடனும் முழுமனதுடனும் களங்கமற்ற

நிலையுடனும் புரியாமலிருந்தால் அது வீணாகி விடும் என சுருக்கம். தம் பிரார்த்தனைகளை நேர்மையுடன் நிறைவேற்றிட வேண்டும். அதை உணர்வுடன் செய்ய வேண்டும்., கவனத்துடன் புரிய வேண்டும்.

**வசனம் 2,3**

**"நியாயத்தீர்ப்பைப் பொய்ப்பிக்கின்றானே அவனை நீர் பார்த்தீரா?**
**பின்னர் அவன் அநாதைகளை விரட்டுகின்றான்."**

***<u>இங்கே, தீன் என்ற வார்த்தையின் அர்த்தம்</u>***

❖ நியாயத்தீர்ப்பு நாள், மனிதன் மேற்கொண்ட அனைத்து செயல்களுடையவும் அதாவது நல்லொழுக்கம் ஆன்மீக விஷயம் போன்ற அனைத்து காரியங்களுடையவும் பொறுப்பு அவனுக்கே ஆகும்.

❖ நம்பிக்கை சம்மந்தமான காரியங்கள், மத தொடர்புடைய விஷயங்கள், நன்மை – தீமை சம்மந்தமான விஷயங்கள் (இவை நான் என்ற ஆணவத்துடன் செயல் பட்டதன் எதிரொலி ஆகலாம். அல்லது தனிபட்ட முறையிலான முன்னுரிமையின் அடிப்படையில் மக்களிடம் நடந்துகொண்டதின் பெயரிலாகலாம்) அந்நாளில் இவையாவுக்கும் பதிலளிக்க வேண்டியதாயிருக்கும்.

நிராகரிப்போர்கள், அதைப்போன்றே பலவீனமான மக்களிடம் அவமதிப்புடன் நடந்து கொள்பவர்கள் அதற்கு

(அவர்களின் அச்செயலுக்கு) பதிலளிக்க வேண்டியதாயிருக்கும். அவர்கள் ஆணவத்துடனும் அகங்காரத்துடனும் வாழுகின்றோர்களாவார்கள். நாம் அனைவரையும் அல்லாஹ் நேசிக்கின்றான் என்றிருந்தும் ஏன் நாம் பலவீனமானவர்களையும் ஏழைகளையும் அவமதிக்கவேண்டும்?

**வசனம் 4**

**“மேலும், ஏழைக்கு உணவளிப்பதன் பெயரிலும் அவன் தூண்டுவதில்லை.”**

தொண்டுபுரிவதற்கான எண்ணம் உங்களிடம் அவசியமாகயிருக்க வேண்டும். அதாவது உங்களை போன்ற மனித சகோதரர்களிடம் இரக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். பிறருக்கு தொண்டுசெய்தல், அவர்களிடம் அன்புடன் நடந்து கொள்ளுதல், தன்னலமற்ற நிலையில் அவர்களுக்கு உணவளித்துக் கொள்ளுதல் போன்றவை உண்மையில் மிகவும் உன்னதமான நல்லொழுக்க வழிகளாகும். இத்தகைய கருணை இல்லாதவர்கள், மக்களின் துயரத்தை உணராதவர்களாகவும் இரக்கமற்றவர்களாகவும் மாறுகின்றனர். மட்டுமின்றி இத்தகைய செயல்கள்புரியும் பிறரைக்கூட அதிலிருந்து அவர்கள் தடுத்து கொள்கின்றனர்.

**வசனம் 5,6**

**இன்னும் தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாகவும் இருப்போர்.**

தொழுகையைக் கடைபிடித்தல் என்பது மட்டும், அல்லாஹ்வை வணங்குவதற்கும் அவனுக்காக தொண்டு செய்வதற்குமான ஒரேயொரு வழியல்ல. அவர் உள்ளார்ந்த இதயத்தாலும் மனதாலும் மனசாட்சியாலும் பிரார்த்தனையில் பங்கேற்க வேண்டும். அல்லாஹ் நம் அருகாமையில் இருக்கின்றவன் என்பதை நாம் உணர வேண்டும். அவனது சித்தம் என்ன என்பதை நாம் புரிந்திட வேண்டும். அனுதின வாழ்க்கையில் அதை நாம் செயல் வடிவில் காட்ட வேண்டும்.

வசனம் 7

**“அவர்கள் பிறருக்கு காண்பிக்கவே தான் தொழுகின்றார்கள்.”**

திரு குர் ஆன் 4 – ம் அத்தியாயத்தில் 143 – ம் வசனத்துடன் நமக்கு இதனை ஒப்பிட்டு பார்ப்போம். **“அவர்கள் தொழுகைக்கு தயாராகும் பொழுது சோம்பலுடையவர்களாகவே நிற்க்கின்றார்கள். மனிதர்களுக்கு தங்களை காண்பிப்பதற்காக நிற்கின்றார்கள். இன்னும் மிக சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை.”** நம் மீதான மக்களின் பார்வையும் கவனவுமல்ல., நம் பிரார்த்தனையின் தகுதியை எடைப்போட்டுக்கொள்வது! இதை நாம் உணர வேண்டும். ஒரு நிகழ்சி நிரலாக அத்தகைய செயலை நாம் செய்ய கூடாது. அல்லாஹ் நம் மீது பார்வையிடுகின்றான். அவன் நம்மை கவனிக்கின்றான். அவன் அனைத்தும் கேட்கின்றான். நாம் அவனுக்கு முன் தாழ்மையுடன் சிரம் பணியவேண்டும். அவனை நாம் மனமாற நினைவு கொண்டால் நிச்சயமாகவும் அவனும் நம்மை நினைவு கொள்வான். நாம் நயவஞ்சகரல்ல. (நாம் ஒரு போதும் நயவஞசகராகாமல் இருக்க வேண்டும்.) நாம் ஒரு நன்மை செய்யும் போது, அல்லது ஒரு

“இபாதத்தில் ஏற்படும் போது நம் மனம் வேறு எங்கேயும் இருக்க கூடாது. அல்லாஹ்வின்பால் இருக்க வேண்டும்.

**வசனம் 8**

**“மேலும், அர்ப்பமான பொருள்களைக் கொடுப்பதை விட்டும் தடுக்கின்றனர்.”**

நயவஞ்சகர்கள் பிறரை ஏராளம் காட்டிகொள்ள விரும்புகின்றனர். அவர்கள் மேற்கொண்ட நற்செயல்கள், மிக பக்தியுடனும் மதபற்றுடனும் ஆகும் என ஏனையவர்களை காட்டி கொள்ள ஆசைப்படுகின்றனர். அவர்களின் இத்தகைய நடவடிக்கைகள் உண்மையில் வீணானதாகும். அவர்களை ஒரு சோதனையில் உட்படுத்தி கொண்டால், மனித சகோதரர்களிடம் இரக்கத்துடன் பரிமாறி கொள்வதற்கு அவர்களிடம் கூறினால், எளிமையுடனும் நன்மையுடனும் செயல்பட்டுக்கொள்ள அவர்களிடம் கேட்டுக்கொண்டால், இத்தகைய சோதனைகளில் அவர்கள் தோல்வியடைகின்றனர்.

திரு குர் ஆனின் 2 – ம் அதிகாரம் 265, 266 வசனமாக இதை ஒப்பிட்டு பாருங்கள்.

**“நம்பிக்கை கொண்டவாகளே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதற்களுக்கு காட்டுவதற்காக தன் பொருளைக் செலவழிப்பவனை போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் தான தர்மங்களை பாழாக்கி விடாதீர்கள். அத்தகையாளர்களுக்கு உவமையாவது, ஒரு வழுக்கு பாறையாகும்.**

அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது. அதன்மீது பெரு மழை பெய்து அதிலிருந்த சிறு மண்களை துடைத்து விட்டது. இவ்வாறே அவர்கள் செய்த தானத்திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள். இன்னும் அல்லாஹ் கா.ஃ.பிரான மக்களை நேர் வழியில் செலுத்துவதில்லை." (2 : 265).

"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவும், தங்கள் ஆத்மாவை உறுதியாக்கி கொள்ளவும், யார் தங்கள் செல்வங்களைச் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்கு உவமையாவது, உயரமான வளமுள்ள பூமியில் ஒரு தோட்டம் இருக்கின்றது. அதன் மேல் பெருமழை பெய்கின்றது. அப்பொழுது அதன் விளச்சல் இரட்டிப்பாகின்றது. இன்னும், அதன் மீது அப்படிப் பெருமழை பெய்யபவிட்டாலும் பொடி மழையே அதற்கு போதுமானது. அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் பார்க்கின்றவனாக இருக்கின்றான்." (2 : 266).

மார்க்கத்திலும் அனுதின வாழ்கையிலுமான நயவஞ்சகத்தை அல்லாஹ் எவ்வாறு ஏளனம் செய்து கொள்கின்றான் என்பதை பாருங்கள். நல்ல நோக்கத்துடன் நற்செயல்கள் புரியுங்கள். அதை முழுமை படுத்தி கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை மனதில் கொண்டு அதை செய்து முடித்து விடுங்கள். நம் செயல்கள் பிறரை காட்டிக் கொள்வதற்காகயிருந்தால், அச்செயல் மூலமாக அந்நபருக்கு எவ்வித பயனும் கிடைப்பதில்லை. மாறாக அந்நபரின் அனைத்து செயல்களும் அல்லாஹ்வின் முன் வீணானதாக மாறிவிடும். (எந்த பயனும் இருப்பதில்லை)

அவன் திருப்தியடையும் வகையில், நல்ல செயல்களை நல்ல நோக்கத்துடன் செய்வதற்கு அவன் நமக்கு உதவி புரிவானாக! தம்

சுற்றுவட்டார மக்களுக்கும் நம் நாட்டை சார்ந்த எல்லா குடிமக்களுக்கும் நன்மை செய்வதற்காக அவன் நமக்கு துணை புரியட்டும்! இத்தகைய இபாதத் வாயிலாக அல்லாஹ்வின் அருகாய்மையை அடைவதற்கும், மானிட குலத்தை ஏக இறை கொள்கையின்பால் அழைத்துச் செல்வதற்கும் முடிந்து விடும். ஏக இறைவனின் பாலான அழைப்பு, இறை திருப்தியை மட்டும் நாடிக்கொண்டு புரியவேண்டிய செயலாகும். மற்று எவ்வித தீய நோக்கங்களும் அதில் இருக்க கூடாது. அவ்வாறேயானால் அல்லாஹ் நம் செயலில் திருப்தியடைந்து விடுவான். இவ்வுலகிலும் மறுவுலகிலும்! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Published by:**

Jamaat Ul Sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817

**Issued by:**



**K. Nazeer,**
**State Amir - Tamil Nadu, India**
**Jamaat Ul Sahih Al Islam**